தினகரன் 31 JUL 2025

20 ஏக்கரில் மா, தென்னங்கன்றுகள் நட்டு பராமரிப்பு

பசுமைத்தளமாக மாறும் அரசு மருத்துவக்கல்லூரி

கிரீன்கமிட்டி அமைத்து பணிகள் தீவிரம்

சேலம், ஜூலை 31: சேலம் அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தை பசுமைத்தள மாக மாற்றும் பணிகள் நடந்து வருகிறது. இதற்காக 20 ஏக்கர் பரப்பளவில் மா, தென்னை மரக்கன்றுகள் நடவு செய்து பராமரிக்கப் பட்டு வருகிறது.

சேலம் இரும்பாலை சாலையில், 150 ஏக்கர் பரப்பளவில் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி பரந்து விரிந்து செயல்பட்டு வருகிறது. இதில் எம்பிபிஎஸ் பாடப்பிரிவில் ஒவ்வொரு வருடமும் 200 மாணவர்களும், முதுகலை எம்டி, எம்எஸ், எம்டிஎஸ் படிப்பில் 200க்கும் மேற்பட்ட மாணவர்களும் சேர்ந்து படித்து வருகின்றனர். இதுதவிர்த்து மைக்ரோ ஆப்தாலிக், காலேஜ் ஆப் நர்சிங், பாராமெடிக்கல், அலைடு ஹெல்த் சயின்ஸ் உள்ளிட்ட படிப்புகளில் ஏராளமான மாணவ, மாணவிகள் சேர்ந்து படித்து வருகின்றனர். மருத்துவக்கல்லூரி வளாகத்தில் பசுமையான சூழலை உருவாக்கும் வகையில் தொடர்ச்சியாக மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் மருத்துவக்கல்லூரி வளாகத்தில் உள்ள காலியிடத்தில் 500 மா மரக்கன்றுகள் நடவு செய்யும் நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் தேவிமீனாள் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக சேலம் கலெக்டர் பிரதாபதேவ் கலந்து கொண்டு மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைத்தார். தொடர்ந்து ஒரே நேரத்தில் 500 மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டனர். இந்நிகழ்ச்சியில் மருத்துவமனையின் கண்காணிப்பாளர் ராஜகுமார், துணை முதல்வர் செந்தில்குமார், சர்க்கரை நோய் துறைத்தலைவர் பிரகாஷ், இந்தியன் ஆயில் நிறுவன அதிகாரி குருமூர்த்தி, எம்.ஆர்.டி.ஏ கம்யூனிட்டி ஆப்ரேட்டர் மோக்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து அரசு மருத்துவர்கள் கூறியதாவது: சேலம் அரசு மருத்துவக் கல்லூரியில் பசுமையான சூழ்நிலையை உருவாக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக கல்லூரியில் கிரீன் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. கல்லூரியின் மத்தி தலைமையில் 11 பேர் கொண்டகுழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் கல்லூரி, மருத்துவமனை வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு கண்காணிக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். மருத்துவக்கல்லூரி வளாகத்தின் பின்புறத்தில் காலியாக உள்ள 20 ஏக்கர் இடத்தினை பசுமையாக்கும் வகையில் மரக்கன்றுகள் நட இடம் விடப்பட்டது.

இதற்காக கல்லூரி வளாகத்தில் இருந்த சுமார் 500 மூட்டை மண் மோட்டாரும் பொருத்தி தயாராக வைக்கப்பட்டு காலியாக இருந்த இடத்தினை தெளிவு இயந்திரங்களால் சமன்படுத்தி சீர்செய்யப்பட்டது. தொடர்ந்து 30 அடி தீன் அகலத்தில் தென்னங்கன்றுகள் நடவு செய்யும் வகையில், 200 குழிகள் தோண்டப்பட்டு கடந்த 7ம் தேதி நடந்த இரண்டு எம்பிபிஎஸ் மாணவர்களின் பட்டமளிப்பு விழாவின் போது, தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தலைமையில் 200 தென்னங்கன்றுகள் நடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தற்போது 500 இலுமிச்சை மரத்தை வகைகளை சேர்ந்த மாமரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு செடிக்கும் 25 அடி தீன் அகலத்தில் நன்கு காற்றோட்டமாக வளரும் வகையில், இரண்டு வெளி விட்டு நடவு செய்யப்பட்டுள்ளது. இந்த 20 ஏக்கர் பரப்பளவில் நடப்பட்டுள்ள 200 தென்னங்கன்றுகள், 500 மரக்கன்றுகளுக்கும் செடியின் வேர் களுக்கு தண்ணீர் முழுமையாக சேரும் வகையில் துணைநீர் சொட்டுநீர் பாசனம் பொட்டப்பட்டுள்ளது. இதனால் தண்ணீர் விரயமாவது தடுக்கப்படும். தென்னங்கன்றுகள் மற்றும் மாங்கன்றுகள் என இரண்டுமே 3 முதல் 4 ஆண்டு களுக்கள் பலன் கொடுக்க ஆரம்பித்து விடும். இந்த செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சு, களைவெடுப்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள தனியாக இரண்டு பணியாளர்கள் போட்டப்பட்டுள்ளனர். அவர்கள் இந்த செடிகளை பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

▶ சேலம் இரும்பாலையில் உள்ள அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரியில், தென்னங்கன்றுகள் நடவு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாணவர்கள் ஆர்வம்

"மருத்துவக்கல்லூரியில் ஒரு பசுமையான சூழ்நிலையை உருவாக்க வரிந் கிரீன் கமிட்டியின் முக்கிய நோக்கம் ஆகும். கமிட்டியில் உள்ள வர்கள் ஒருங்கிணைந்து, கல்லூரி மாணவர் மற்றும் பொதுமக்கள், மருத்துவ மாணவர்களும் மரம் வளர்ப்பில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பது, வாக்கிங் செல்லும் வழியை மருத்துவ மாணவர்களுக்கு மட்டும் அல்லாமல் ஆரோக்கியமாக மாறும் ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான மருத்துவ மாணவர்கள் புதிதாக கல்லூரிக்கு வருகின்றனர். அதுமட்டுமல்ல, நடப்பாண்டு 200 தென்னைப்பிள்ளைகள் எங்கள் கல்லூரிக்கு வந்துள்ளது. கல்லூரி வளாகம் அமைந்துள்ள 150 ஏக்கரில் தற்போது 20 ஏக்கரில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் மேலும் விரிவாக்கம் செய்யப்படும்' என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.